# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 87/2017 மாரியம்மாள் (பிசா2) தேதி:21.07.2025</u>**

**<u>பிசா. 2 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் இந்த வழக்கில் 7ம் பிரதிவாதியின் மனைவி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை 7ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை:</u>** (வாதிகள் தரப்பில்)

தாவாசொத்துக்கள் குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டவை என்றால் சரிதான். குருசாமி நாயக்கரிடம் இருந்து தாவாசொத்தை எனது கணவர் கிரையம்பெற்று அனுபவம்செய்து வருகிறார். குருசாமி நாயக்கருக்கு எத்தனை ஆண்வாரிசுகள், பெண்வாரிசுகள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவருக்கு 3 ஆண்மக்கள் என்ற விவரம் தெரியும். எத்தனை பெண்மக்கள் என்ற விவரம் தெரியாது. ராமசுப்பு என்பவரிடம் 10ஏக்கருக்கு மேல் உள்ள சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் பேசப்பட்டது.அவ்வாறு கிரைய ஒப்பந்தம் பேசப்பட்டு 25 வருடங்கள் ஆகிறது. என் கணவர்தான் மேற்படி ராமசுப்புவிடம் கிரையஒப்பந்தம் குறித்து பேசினார். அந்த சொத்துக்கு பட்டா யார்பெயரில் இருந்ததது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிரையத்தொகை எவ்வளவு பேசப்பட்டது என்றால் அதுகுறித்து என் கணவருக்குத்தான் தெரியும். என் கணவர்தான் அட்வான்ஸ் கொடுத்தார். ராமசுப்பு எந்தஆண்டு இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ராமசுப்பு மேற்படி சொத்தை எங்களிடம் ஒப்படைத்தார் என நான் கூறும் நிலையில் அதற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் ராமசுப்பு ஆவணம் எழுதிகொடுத்துள்ளார். ராமசுப்பு உயிருடன் இருக்கும்போது மேற்படி சொத்தை பொறுத்து கிரையம் எழுதிதர ஏதாவது நடவடிக்கை எடுத்தோமா என்றால் நடவடிக்கை எடுத்தோம். நாங்கள் கேட்டபோது 3பேரும் சேர்ந்துதான் எழுதித்தரமுடியும் என காலம் கடத்திவந்தார்.

தாவாசொத்தை நாங்கள் அனுபவம்செய்துவருவதாக கூறும் நிலையில் எங்கள் பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். என்கணவர் பெயரில் ராமசுப்பு கிரையஒப்பந்தம் ஏற்படுத்தியதாக நான் கூறுவது மோசடி என்றாலும் அவ்வாறு ஆவணம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் ராமசுப்பு என்கணவர் பெயரில் எவ்வித ஆவணமும் எழுதித்தரவில்லை என்றால் சரியல்ல. கிரையஒப்பந்தம் ஏற்பட்டு அனுபவம்செய்துவருவதாகவும், பயிர் காப்பீடுசெய்து நஷ்டஈடு வாங்கியதாக கூறுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவாபடும் சொத்துக்கள் 1 முதல் 6 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்துவருகிறது என்றால் சரியல்ல. தாவாசொத்தில் பலலட்சம் பெருமான வீடுகட்டி அனுபவம்செய்துவருவதாக நான் கூறும் நிலையில் அது குறித்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தில் ஒருபகுதியை நானும் என் கணவரும் ஆக்கிரமிப்பு செய்துவீடு கட்டியுள்ளோம் என்றாலும் அந்த ஆக்கிரமிப்பை அகற்றிதர கடமைப்பட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. 7ம்பிரதிவாதி என் கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

<u>**குறுக்கு விசாரணை:**</u> 1,2,4,6 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு பதிவுசெய்யப்படுகிறது.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.